**கொக்குவில் இந்துக் கல்லூரி**
**பழைய மாணவர் சங்கம் (கனடா)**
**KOKUVIL HINDU COLLEGE**
**OLD STUDENTS ASSOCIATION (CANADA)**
**2015**

# 15 வயதுக்கு உட்பட்டோர் – ஆண் / பெண்

# பண்ணிசைப் போட்டி

1. நிரைகழ லரவஞ் சிலம்பொலி யலம்பு — பண் - புறநீர்மை
நிமலர்நீ றணிதிரு மேனி
வரைகெழு மகளோர் பாகமாய்ப் புணர்ந்த
வடிவினர் கொடியணி விடையர்
கரைகெழு சந்துங் காரகிற் பிளவும்
அளப்பருங் கனமணி வரன்றிக்
குரைகட லோதம் நித்திலங் கொழிக்கும்
கோணமா மலையமர்ந் தாரே.

2. முத்திநெறி அறியாத மூர்க்கரொடு முயல்வேனைப் — திருவாசகம்
பத்திநெறி அறிவித்துப் பழவினைகள் பாறும்வண்ணம்
சித்தமலம் அறிவித்துச் சிவமாக்கி எனையாண்ட
அத்தனெனக் கருளியவாறு ஆர்பெறுவார் அச்சோவே

3. ஏறுமயில் ஏறிவிளை யாடுமுகம் ஒன்றே
ஈசனுடன் ஞானமொழி பேசுமுகம் ஒன்றே
கூறுமடி யார்கள்வினை தீர்க்குமுகம் ஒன்றே
குன்றுருவ வேல்வாங்கி நின்றமுகம் ஒன்றே
மாறுபடு சூரனை வதைத்தமுகம் ஒன்றே
வள்ளியை மணம்புணர வந்தமுகம் ஒன்றே
ஆறுமுக மானபொருள் நீயருளல் வேண்டும்
ஆதியரு ணாசலம் அமர்ந்தபெரு மாளே.